காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் மோதல் சம்பவம்

# துணை முதல்வர் தலைமையில் விசாரணைக் குழு அமைப்பு

**பெங்களூரு, ஜன.24:** கர்நாடகத்தில் கேளிக்கை விடுதியில் எம்எல்ஏக்கள் மோதலில் ஈடுபட்ட சம்பவம் குறித்து துணை முதல்வர் ஜி.பரமேஸ்வர் தலைமையில் விசாரணைக் குழுவை காங்கிரஸ் அமைத்துள்ளது.

பெங்களூரு பிடதியில் அமைந்துள்ள ஈகிள்டன் கேளிக்கை விடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்த காங்கிரஸ் எம்எல்ஏக்களில் கம்பளி தொகுதி எம்எல்ஏ ஜே.என்.கணேஷ், ஹொசபேட் தொகுதி எம்எல்ஏ ஆனந்த்சிங் இடையே மோதல் ஏற்பட்டது.

இதில் ஆனந்த்சிங் தாக்கப்பட்டார். அப்பல்லோ மருத்துவமனையில் தொடர்ந்து 5-ஆவது நாளாக அவர் சிகிச்சை பெற்று வருகிறார். இந்நிலையில் ஜே.என்.கணேஷ் மீது வழக்குப் பதிந்துள்ள போலீஸார், அவரை கைது செய்ய தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விவகாரம் கர்நாடக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதோடு, காங்கிரஸ் மீதான பார்வையை மக்களிடையே சீர்குலைத்துள்ளது. இந்த சம்பவத்தால் தர்மசங்கடத்தில் நெளிந்துவரும் கர்நாடக காங்கிரஸ், அதிலிருந்து விடுபடும் நோக்கில் இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்க, துணை முதல்வர் ஜி.பரமேஸ்வர் தலைமையில் விசாரணைக் குழு அமைத்துள்ளது.

இதுகுறித்து பெங்களூரில் வியாழக்கிழமை துணை முதல்வர் ஜி.பரமேஸ்வர் செய்தியாளர்களிடம் கூறியது:

மோதல் சம்பவத்தில் வழக்குப் பதிந்துள்ள போலீஸார், காங்கிரஸ் எம்எல்ஏ ஜே.என்.கணேஷை கைதுசெய்ய தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஜே.என்.கணேஷை ஏற்கெனவே காங்கிரஸ் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்துள்ளோம். இந்த விவகாரத்தில் நடந்தது என்ன என்பதை ஆராய்ந்து, கட்சி மேலிடத்துக்கு அறிக்கை அளிப்பதற்காக என் தலைமையில் கட்சி அளவிலான விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

முன்னதாக, பெங்களூரு வளர்ச்சி ஆணையத்தின் அலுவலகத்தில் துணை முதல்வர் ஜி.பரமேஸ்வரை இன்போசிஸ் நிறுவனர் என்.ஆர். நாராயணமூர்த்தி சந்தித்து, மைசூரில் தான் படித்த தேசிய பொறியியல் மையத்தை மேம்படுத்துவது தொடர்பாக விவாதித்தார். மேலும், பெங்களூரு மாநகரின் வளர்ச்சிக்கும் சில ஆலோசனைகளை நாராயணமூர்த்தி வழங்கியுள்ளார்.

# தும்கூரு அருகே இயந்திர உபகரண பூங்கா

**பெங்களூரு, ஜன. 24:** தும்கூரு அருகே வசந்தபுராவில் 500 ஏக்கரில் இயந்திர உபகரண பூங்கா அமைக்கப்படும் என்று முதல்வர் குமாரசாமி தெரிவித்தார்.



பெங்களூரு சர்வதேச மாநாட்டு அரங்கில் வியாழக்கிழமை இந்திய இயந்திர உபகரண கண்காட்சியைத் தொடக்கிவைத்து அவர் பேசியது:

மாநிலத்தில் உற்பத்தி துறையில் கூடுதல் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் தும்கூரு அருகே வசந்தப்புராவில் 500 ஏக்கரில் இயந்திர உபகரண பூங்கா அமைக்கப்படும். இதன்மூலம் கர்நாடகத்தில் இயந்திர உபகரணத் துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.

இயந்திர உபகரண பூங்காவில் தேவையான அடிப்படை கட்டுமானப் பணிகளை செய்துதர அரசு தயாராக உள்ளது. தொழில் துறையில் சிறந்து விளங்கும் கர்நாடகத்தில் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதனால், ஆண்டுக்கு 12 சதவீதம் தொழில் வளர்ச்சியும், ரூ. 5 லட்சம் கோடி முதலீடும் ஈர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டுக்கு 15 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

கர்நாடகத்தில் மாவட்டம்தோறும் தொழில்பேட்டைகளைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. முதல்கட்டமாக பீதர், கலபுர்கி, ஹாசன், கொப்பள், பல்லாரி, சித்ரதுர்கா, தும்கூரு, சிக்பள்ளாப்பூர், மைசூரு ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்படும். நவீன தொழில் துறையில் கர்நாடகம் தலைநகராக விளங்குகிறது. கர்நாடகத்தில் ஏற்கெனவே எச்.எம்.டி, எச்.ஏ.எல், என்.ஏ.எல் உள்ளிட்ட பொது நிறுவனங்கள் சிறந்து விளங்குகின்றன. கர்நாடகத்தில் தொழில் துறைகளின் பரவலான வளர்ச்சிக்கு அரசு உதவி செய்யும் என்றார்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.ஜே.ஜார்ஜ், ஆர்.வி.தேஷ்பாண்டே, இந்திய இயந்திர உபகரண கண்காட்சியின் தலைவர் ராம்தாஸ், இந்திய இயந்திர உபகரண உற்பத்தியாளர்களின் சங்கத் தலைவர் ஜம்ஷெட் கோத்ரேஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பெண் குழந்தைகள் பாதுகாப்பில் சிறப்பிடம்: தமிழகத்துக்கு இரு விருதுகள்

நமது நிருபர்

**புது தில்லி, ஜன. 24:** பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் கற்பித்தல் திட்டத்தில் சிறந்த வகையில் செயல்பட்டதற்காக தமிழகத்துக்கு இரு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம் மற்றும் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் (பேட்டி பச்சாவோ, பேட்டி படாவோ) திட்டத்தை நாடு முழுவதும் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் சார்பில் தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற தேசியப் பெண் குழந்தைகள் தின விழாவில் விருதுகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தை தமிழகத்தில் சிறந்த அளவில் செயல்படுத்தியதற்காக மாநில அளவிலான விருதும், திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறந்த வகையில் செயல்படுத்தியதற்காக மாவட்ட அளவிலான விருதும் வழங்கப்பட்டன.

மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சர் மேனகா காந்தி வழங்கிய இந்த விருதுகளை தமிழக அரசின் சார்பில் சமூக நலம் மற்றும் ஊட்டச்சத்து உணவுத் திட்டத் துறை முதன்மைச் செயலர் டாக்டர் கே. மணிவாசன், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் கே.எஸ். கந்தசாமி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் துறை இணையமைச்சர் டாக்டர் விரேந்திர குமார், துறைச் செயலர் ராகேஷ் ஸ்ரீவாஸ்தவா, தமிழக சமூக நலத் துறை ஆணையர் வி.அமுதவள்ளி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த விருது குறித்து தமிழக அரசின் முதன்மைச் செயலர் டாக்டர் கே. மணிவாசன் கூறுகையில், 'தமிழகத்துக்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மொத்தம் இரு விருதுகள் கிடைத்துள்ளன.

தமிழக முதல்வ முதல்வரின் தலைமையின் கீழ் பெண் குழந்தைகளுக்கு பல்வேறு உதவித் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வந்ததற்கு விருதுகள் வழங்கப்பட்டதை ஓர் அங்கீகாரமாகக் கருதுகிறோம்' என்றார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் கே.எஸ். கந்தசாமி கூறுகையில், 'திருவண்ணாமலை மாவட்டத்தில் இரு ஆண்டுகளுக்கு முன்பு ஆண்- பெண் குழந்தைகள் விகிதாச்சாரம் 1,000-க்கு 883 என இருந்தது. இந்த நிலையை மாற்ற பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அதன் விளைவாக தற்போது இந்த விகிதாச்சாரம் 1,000-க்கு 963 என உயர்த்தப்பட்டுள்ளது. பெண்களின் வாழ்வாதாரம், கல்வித் தரம் ஆகியவற்றை முன்னேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன' என்றார்.

மத்திய அமைச்சர் மேனகா காந்தி வழங்கினார்




தமிழகத்தில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் கல்வித் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியதற்கான விருதை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சர் மேனகா காந்தியிடம் இருந்து பெறும் தமிழக அரசின் சமூக நலத் துறை முதன்மைச் செயலர் கே. மணிவாசன்.

## திருவண்ணாமலை மாணவி நந்தினிக்கு பாராட்டு

குழந்தைத் திருமணத்தை தடுத்தும் நிறுத்தும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 11-ஆம் வகுப்பு மாணவி நந்தினி இந்த விழாவில் பாராட்டப்பட்டார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'பெண் குழந்தைகளுக்கு எதிராக நிகழ்த்தப்படும் விஷயங்களில் குழந்தைத் திருமணமும் ஒன்று. குழந்தைத் திருமண நடவடிக்கையால் நானும் பாதிக்கப்பட்டேன். நான் 9-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது 14-வயதில் பெற்றோர் எனக்கு திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்தனர். அதைத் தடுத்து நிறுத்தினேன்.

இந்த விவகாரத்தை வெளிக் கொண்டு வந்ததால், தமிழக முதல்வரிடம் கடந்த ஆண்டு, 'பெண் குழந்தை அதிகாரமளித்தல் விருது' பெற்றேன். அதன்பிறகு, குழந்தைத் திருமணத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக பள்ளிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தினேன்.

தற்போது தேசிய அளவில் நடைபெற்ற இந்த விழாவில் பங்கேற்றது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 'அலைகள் பெண் குழந்தைகள் இல்லத்தில்' தங்கி பள்ளியில் படித்து வருகிறேன். தற்போது இந்த விழாவில் பேசும் அளவுக்கு எனக்கு தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் அளித்தது அரசுதான்' என்றார்.

# போராட்டம்: தற்காலிக ஆசிரியர்களை நியமிக்க அரசாணை

**சென்னை, ஜன. 24:** ஜாக்டோ- ஜியோ சங்கத்தினர் நடத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு 17 பி பிரிவின் கீழ் நோட்டீஸ் அனுப்ப பள்ளிக்கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது. மேலும் பணிக்கு வராத ஆசிரியர்களுக்குப் பதிலாக தற்காலிக ஆசிரியர்களை நியமிக்கவும் அரசாணை வெளியிட்டுள்ளது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ சார்பில் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், போராட்டத்தில் பங்கேற்றுள்ள ஆசிரியர்கள் அனைவரும் 25-ஆம் தேதிக்குள் (வெள்ளிக்கிழமை) பணிக்குத் திரும்ப வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது.

இருப்பினும் ஜாக்டோ- ஜியோ அமைப்பின் போராட்டம் 3-ஆவது நாளாகவியாழக்கிழமையும்தொடர்ந்தது. அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சியர் அலுவலகம் முன்பு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் திரண்டனர். மறியலில் ஈடுபட்ட ஊழியர்களை போலீஸார் கைது செய்தனர்.

**போராட்டம் தொடரும்:** இதற்கிடையே, நீதிமன்ற உத்தரவை ஏற்று பணிக்கு திரும்புவதா? அல்லது தொடர்ந்து போராட்டம் நடத்துவதா? என்பது குறித்து முடிவு செய்ய ஜாக்டோ-ஜியோவின் உயர்மட்டக் குழு ஆலோசனைக் கூட்டம் சென்னை திருவல்லிக்கேணியில் வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான நிர்வாகிகள், தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த வேண்டும் என தெரிவித்தனர். இதையடுத்து செய்தியாளர்களைச் சந்தித்த இரா.தாஸ்,தாமோதரன் உள்ளிட்ட நிர்வாகிகள், தமிழக அரசிடம் வலியுறுத்தியுள்ள 9 அம்ச கோரிக்கைகள் நிறைவேறும் வரை ஜாக்டோ- ஜியோ அமைப்பின் போராட்டம் தொடரும் என தெரிவித்தனர்.

**நோட்டீஸ் அனுப்ப உத்தரவு:** இதைத் தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களிடம் விதி 17 பி பிரிவின் கீழ் உரிய விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் வி.சி.ராமேஸ்வரமுருகன் வியாழக்கிழமை பிற்பகல் உத்தரவிட்டார். இதையடுத்து ஆசிரியர்கள் மீது விரைவில் துறை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதே போன்று போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஆசிரியர்களுக்குப் பதிலாக தற்காலிக ஆசிரியர்களை நியமிக்க பள்ளிக்கல்வித்துறைச் செயலர் பிரதீப் யாதவ் வியாழக்கிழமை அரசாணை பிறப்பித்துள்ளார்.

**ரூ.7,500 ஊதியத்தில் தற்காலிக ஆசிரியர்கள்:** அதில், பள்ளியில் உள்ள பெற்றோர்- ஆசிரியர் சங்கம் மூலமாக பள்ளிகளுக்கு அருகில் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை ரூ.7,500 மாத ஊதியத்தில் நியமித்து பள்ளிகளை தடையின்றி நடத்த வேண்டும். பள்ளியில் பெற்றோர்- ஆசிரியர் சங்கம் இல்லாவிட்டால் அருகில் உள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த பெற்றோர்- ஆசிரியர் சங்கங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வழிகாட்ட வேண்டும்.

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மீதான நடவடிக்கை ஜனவரி 26 முதல் தொடங்கும். வேலைநிறுத்தத்தில் பங்கேற்கும் ஆசிரியர்களுக்குப் பதிலாக தற்காலிக ஆசிரியர்களை பள்ளிகளில் கற்பித்தல் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும் என அரசாணையில் கூறியுள்ளார்.

# 7 பேர் விடுதலை குறித்து ஆளுநரின் விளக்கம் தேவை

**சென்னை, ஜன.24:** ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய 7 பேர் விடுதலை குறித்து ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் விளக்கம் அளிக்க வேண்டும் என்று, பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தவறுதலாக தண்டிக்கப்பட்ட பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களையும் விடுதலை செய்ய தமிழக அமைச்சரவை பரிந்துரைத்து 138 நாள்கள் ஆகின்றன. ஆனால், அவர்களின் விடுதலை இன்னும் சாத்தியமாகவில்லை.

7 தமிழர்கள் விடுதலை விவகாரம் குறித்து முடிவெடுப்பதில் எந்தக் காரணமும் இல்லாமல் ஆளுநர் மாளிகை தாமதம் செய்வது கண்டிக்கத்தக்கது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 161-ஆவது பிரிவின்படி 7 தமிழர்களை விடுதலை செய்யும் விஷயத்தில்ஆளுநர்முடிவெடுக்க காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்பது உண்மை தான். ஆனால், அவர்களை விடுதலை செய்ய பல்வேறு காரணங்கள் இருக்கும் நிலையில், இந்த ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு விடுதலையை ஆளுநர் தாமதிப்பது முறையல்ல. 7 தமிழர் விடுதலையில் தாமதம் குறித்து தமிழக மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டிய கடமை ஆளுநருக்கு சட்டப்படி இல்லை என்றாலும் அறத்தின் அடிப்படையில் அவர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## சிபிஐ புதிய இயக்குநர் நியமனம்:முடிவு எட்டப்படவில்லை

**புது தில்லி, ஜன. 24:** சிபிஐ அமைப்புக்கு புதிய இயக்குநரை தேர்வு செய்ய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. எனினும், இதில் புதிய இயக்குநரை தேர்வு செய்வது குறித்து இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

பிரதமர் மோடியின் தலைமையில் அவரது இல்லத்தில் இது தொடர்பாக ஆலோசனைக்கூட்டம்நடைபெற்றது. அதில்உச்சநீதிமன்றதலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், மக்களவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் பங்கேற்றனர்.

எனினும், இக்கூட்டத்தில் புதிய சிபிஐ இயக்குநர் யார் என்பது குறித்து இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. எனவே, விரைவில் மீண்டும் அடுத்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிபிஐ அமைப்புக்கு இயக்குநராகநியமிக்கதகுதிவாய்ந்த அதிகாரிகளின் பெயர்கள், அவர்கள் குறித்த முழு விவரங்களும் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர், தலைமை நீதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரிடம் அளிக்கப்பட்டது. எனினும், எவரது பெயரும் முடிவு செய்யப்படவில்லை என்று மத்திய அரசு அதிகாரிகள் கூறினர்.

## பவானி ஆற்றில் மூழ்கி பள்ளி மாணவர் சாவு

**சத்தியமங்கலம், ஜன. 24:** சேலம் மாவட்டம்,வெப்படையைச் சேர்ந்த ரத்தினம் மகன் ஆனந்த். அங்குள்ள பள்ளியில் 8 ஆம் வகுப்பு படித்து வந்தார். கோவையைச் சேர்ந்த இவரது நண்பர் ரஞ்சித் என்பவருடன் ஆனந்த், பவானிசாகர் அணைக்கு வந்துள்ளார். அப்போது, அக்கரைதத்தப்பள்ளி பவானி ஆற்றில் இருவரும் குளித்துள்ளனர். அப்போது, ஆழமான பகுதிக்குச் சென்ற ஆனந்த் நீரில் மூழ்கினார்.

இதுகுறித்து சத்தியமங்கலம் தீயணைப்பு நிலையத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கு வந்த தீயணைப்பு வீரர்கள் தீவிர தேடுதலுக்குப் பின் ஆனந்த் சடலத்தை மீட்டனர்.

**CHANGE OF NAME**

**PAPPATHI THIRUMALAISAMY** W/o. Thiru THIRUMALAISAMY born on 06.06.1971 (Native District Namakkal, Tamilnadu) Residing at 3-12 Nadu Street, Periyapatti (Po), Namakkal (Tk & Dt). Tamilnadu. shall henceforth be known as **RAMAPRABHA THIRUMALAISAMY.**

PAPPATHI THIRUMALAISAMY

Namakkal,

**லட்சுமி விலாஸ் வங்கி**

பிராந்திய அலுவலகம் : எண்.9/4, அத்வைத ஆஸ்ரம் ரோடு, சேலம் - 636 004.
போன் : 0427-4331456, 4331415, 4331416;

**சுவாதீன அறிவிப்பு**

(அசையா சொத்திற்காக) (2002 பிணைய நலன் அமலாக்கம் விதிகள், விதி 8(1), பிற்சேர்க்கை IV -ன்படி)

**தி லட்சுமி விலாஸ் வங்கி லிட், செவ்வாய்பேட்டை கிளை,** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பிரிவு 13(12), SARFAESI சட்டம் 2002 பிணையநலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 3-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி கடன் பெற்றுள்ள **திருமதி.V.சாந்தகுமாரி, உரிமையாளர் : M/s. சூரியா சில்க் ஹவுஸ் மற்றும் ரெடிமேட்ஸ்,** எண்.387, ஸ்டீல் பிளாண்ட் ரோடு, சோளம்பள்ளம் பஸ் ஸ்டாப், பழைய சூரமங்கலம், சேலம்-636005 மற்றும் உத்தரவாதமளித்தவர் : **திரு.M.புஷ்பராஜ்,** கதவு எண்.94/198, நாராயணன் வீதி, பொம்மூர், சேலம்-636007 ஆகியோர்களின் கடன் நிலுவைத் தொகையான **ரூ.18,21,938.23 (ரூபாய் பதினெட்டு லட்சத்து இருபத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து எட்டு மற்றும் பைசா இருபத்து மூன்று மட்டும்) 07.10.2018** தேதி வரை பின்வட்டி பிற செலவுகளுடன் கேட்பு ஓலைத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு **08.10.2018** தேதியிட்ட கேட்பு ஓலை மூலம் பணித்தது. ஆனால் மேற்படி கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் இந்த கடன் தொகையைக் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் செலுத்தத் தவறிவிட்டபடியால், வங்கி தன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் மூலமாக மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13(4)ன் மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 8ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் மூலமாக கடன்தாரரான **திருமதி.V.சாந்தகுமாரிக்குச்** சொந்தமான கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **22.01.2019** அன்று அடையாள கையகப்படுத்திக் கொண்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர் மற்றும் உத்தரவாதமளித்தவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (விற்பனை நாளுக்கு அல்லது பரிமாற்றம் செய்யப்படுவதற்கு முன்பாக)

குறிப்பாக கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் மற்றும் பொது மக்களும் இந்த சொத்தின் மீது எந்தவித வரவு செலவும் மேற்கொள்ளக் கூடாது என்றும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டால் அது **தி லட்சுமி விலாஸ் வங்கி லிட், செவ்வாய்பேட்டை கிளைக்கு** மேற்கண்ட கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை **ரூ.18,78,452.23 (ரூபாய் பதினெட்டு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து நானூற்று ஐம்பத்து இரண்டு மற்றும் பைசா இருபத்து மூன்று மட்டும்) 21.01.2019** தேதி வரை மற்றும் பின்வட்டி, பிற செலவுகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது.

**அசையாச் சொத்து விபரம்**

சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார்பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, அழகாபுரம் புதூர் கிராமம், சர்வே எண்.164/3 மற்றும் UDR திட்டத்தின் படி உட்பிரிவு சர்வே எண்.164/3D23ல் உள்ள நிலத்திற்கான **எல்லைகள் ;** சேவா கவுண்டர் சொத்துக்கு வடக்கு, கிழமேல் பொதுப்பாதைக்கு தெற்கு, T.விண்ணரசுவின் சொத்துக்குக் கிழக்கு, விசாலாட்சி சொத்துக்கு மேற்கு. இதனிடையில் அளவுகளாக, கிழமேல் இருபுறமும் 20 அடி 9 அங்குலம், தென்வடல் கிழபுறம் 48 அடி, மேற்புறம் 48½ அடி மொத்தம் 1002 சதுர அடி நிலம் எல்லா நடைபாதை உரிமை மற்றும் பிற பாத்தியதைகள் அடங்கிய சொத்து. இந்த சொத்தானது சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

தேதி : 22.01.2019 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: சேலம் — தி லட்சுமி விலாஸ் வங்கி லிட்.

**பாங்க் ஆஃப் பரோடா**
बैंक ऑफ़ बड़ौदा

Regional Stressed Asset Recovery Branch (ROSARB)
82, பேங்க் ரோடு, 2வது தளம், கோயம்புத்தூர் - 641 018,
Ph: 0422-2302423 / 2302324, 95977 76643
E-mail: sarcoi@bankofbaroda.co.in

**மின் ஏல விற்பனை அறிவிப்பு** ஏல நாள்: 12-02-2019/ நேரம் : 11.30am to 12.30pm

**அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

நிர்ணய விலை : ரூ. 1,40,00,000/-. முன் வைப்புத்தொகை : ரூ. 14,00,000/- ஏல அதிகரிப்பு தொகை : ரூ. 1,00,000/-

ஏலம் தேதி / நேரம் : 12.02.2019 (செவ்வாய்) – காலை 11.30 முதல் மதியம் 12.30 வரை

... NEW INTERMEDIARY Account ... 59880015181219, IFSC Code : BARB0SARCOI ... 95977 76643, Tel No.0422 – 2302423, 2302324.

... www.bankofbaroda.com ... https://bob.auctiontiger.net ...

இடம் : கோயம்புத்தூர்
நாள் : 24-01-2019

**CENTRAL PUBLIC WORKS DEPARTMENT**
**NOTICE INVITING e-TENDERS**

The Executive Engineer, Madurai Central Division-I, CPWD, Madurai-625002 (Telephone No.0452-2535940) on behalf of the President of India invites **online Percentage rate bids** from eligible registered contractors of CPWD/specialized agencies, having experience completed at least three works each of value not less than Rs 3.03 lakhs or two works each of value not less than Rs 4.54 lakhs or One work each of value not less than Rs. 6.05 lakhs for NIT No.72 and three works each of value not less than Rs 2.62 lakhs or two works each of value not less than Rs 3.92 lakhs or One work each of value not less than Rs 5.23 lakhs for NIT No.73, from central/state government/Government of India undertaking for the past 7 years in Providing inspection vehicle for the following works:

**(1). NIT No: 72/EE/MCD-I/2018-19**
**Name of work:** Development works at RTC, ITBP campus, Sivagangai, Tamil Nadu. **SH:** Providing Inspection Vehicle for Madurai Central Division - I, CPWD, Madurai during period 2019-2020.
Estimated cost: **Rs. 7,56,556/-** Earnest Money: **Rs.15,140/-**
Period of Completion: **12 Months.**

**(2). NIT No: 73/EE/MCD-I/2018-19**
**Name of Work:** Construction of 1 No. 120 Men Barrack for RTC at ITB Police Sivagangai. **SH:** Providing Inspection Vehicle for Senior Architect, SZ(IV),CPWD, Madurai during period 2019-2020.
Estimated cost: **Rs. 6,54,078/-** Earnest Money: **Rs.13,090/-**
Period of Completion: **12 Months.**
Last Time & Date of submission of Bids : **Up to 15:00 Hrs. on 30. 01. 2019.**

The Executive Engineer, Madurai Central Division-I, CPWD, Madurai-625002 on behalf of the President of India invites **online Percentage rate composite tenders** from eligible "Specialized agencies having eligible experience in management of Guest Houses/ Holiday homes / Inspection Bungalows / Autonomous body" for the following work:

**(3). NIT No: 74/EE/MCD-I/2018-19**
**Name of work:** Up-Keeping and Management Services including Housekeeping, Caretaking, Security, Garden maintenance (Horticulture) and Catering Services for Holiday Home for Central Government Employess at Kanyakumari (Tamil Nadu) for the period during 2018-2019.
Estimated cost: **Rs. 32,44,954/-,** Earnest Money: Rs.**64,900/-**
Period of Completion: **12 Months.**

**(4). NIT No: 75/EE/MCD-I/2018-19**
**Name of work:** Up-Keeping and Management Services including Housekeeping, Caretaking, Security and catering Services for Holiday Home for Central Government Employess at Madurai (Tamil Nadu) for the period during 2018-2019.
Estimated cost: **Rs. 30,38,383/-,** Earnest Money: **Rs.60,770/-**
Period of Completion: **12 Months.**
Last Time & Date of submission of Bids: **Up to 15:00 Hrs. on 05.02.2019.**

The Bid forms and other details can be obtained from the website **www.tenderwizard.com/CPWD** or **www.cpwd.gov.in.** The press notice is also available on **www.eprocure.gov.in**